உளி-1 | ஓசை-58 | ஜனவரி-2022 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| துளசி வேந்தன் | - 4 |
| க. அய்யப்பன் | - 5 |
| தீபிகா நடராஜன் | - 5 |
| பார்வதி பாலசுப்ரமணியம் | - 5 |
| ப்ரியா பாஸ்கரன் | - 6 |
| மகேஷ் சிபி | - 7 |
| அன்பழகன்ஜி | - 7 |
| ச.ஜெய் | - 7 |
| சந்துரு ஆர்.சி. | - 8 |
| கோ.லீலா | - 9 |
| துரை. நந்தகுமார் | - 10 |
| மு.முபாரக் | - 10 |
| முனியாண்டி ராஜ் | - 10 |
| மகிழினி காயத்ரி | - 11 |
| காயத்ரி ராஜசேகர் | - 11 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - 12 |
| நேசன் மகதி | - 12 |
| ஐ.தர்மசிங் | - 12 |
| தி.கலையரசி | - 13 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | - 14 |
| த. ரவீந்திரன் | - 14 |
| ந.சிவநேசன் | - 15 |
| சௌவி | - 16 |
| அழ. இரஜினிகாந்தன் | - 17 |
| கதிரவன் மி | - 17 |
| செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமார் | - 18 |
| சுசித்ரா மாறன் | - 19 |
| ஜபீர் | - 19 |
| ரிஸ்கா முக்தார் | - 20 |
| யாழ் எஸ் ராகவன் | - 20 |
| சிவனேஷ் | - 21 |
| கருவை ந.ஸ்டாலின் | - 21 |
| குமரன்விஜி | - 21 |
| காசாவயல் கண்ணன் | - 22 |
| அலர்மேல்மங்கை | - 23 |
| ரத்னாவெங்கட் | - 24 |
| வலங்கைமான் நூர்தீன் | - 25 |
| வெற்றிச்செல்வன் | - 26 |
| வில்லியம்ஸ் | - 27 |
| மயிலாடுதுறை இளையபாரதி | - 28 |
| ஆனந்தகுமார் | - 28 |
| கவி. விஜய் | - 28 |
| கோ.ஸ்ரீதரன் | - 29 |
| மணிவண்ணன் மா | - 30 |
| மா.காளிதாஸ் | - 30 |
| கதிர் அவன் | - 31 |
| வீரசோழன்.க.சோ. திருமாவளவன் | - 32 |
| கா.ரஹ்மத்துல்லாஹ் | - 33 |
| முகமது பாட்சா | - 34 |
| கோவை.நா.கி.பிரசாத் | - 34 |
| அனு பாரதி | - 34 |
| குடந்தை அனிதா | - 34 |
| பிரபுசங்கர் க | - 35 |
| தங்கராஜ் பழநி | - 36 |
| அமுதா தமிழ்நாடன் | - 37 |
| தோழன் பிரபா | - 37 |
| போஸ் பிரபு | - 38 |
| பா.சரத் | - 38 |
| ரா.ராஜசேகர் | - 39 |

அப்பத்தா சாவிற்கு
மீண்டும் ஒருமுறை
சொந்த ஊர் போயிருந்தேன்

சாவு வீடு முழுக்க
இறைந்து கிடந்தன
என் பால்யத்தின் சிறகுகள்

பாடைக்கு பின்னே
பால்யத்தை சுமந்துகொண்டு
நடந்தேன்

கல்லெறிந்த குளத்தில்
பாதியில் நிற்கும் கல்வீடு

டயர் உருட்டிய பாதையில்
கனரக வாகனத் தடம்

பனைமரமிருந்த இடத்தில்
டாஸ்மாக்

தாத்தா செருப்பை கழற்றி
நடந்த தெருமுனையில்
காலணி கடை

சுற்றிப்போன சுடுகாட்டிற்கு
நேர் சிமெண்ட் சாலை

காதலித்த கமலா வீட்டு வாசலில்
அவள் சாயலை தூக்கிக்கொண்டு
கைக்குழந்தையோடு ஒருத்தி

கண்மாய் இருந்த இடத்தில்
மினரல் தொழிற்சாலை

வெட்டவெளியில் அமர்ந்திருக்கும்
மரத்தடி பிள்ளையார்

ஆற்றில் குதித்த மலை முகட்டில்
கல்குவாரி

மூத்திரச்சந்து இருந்த இடத்தில்
பூக்கடை

ஆலமரம் இருந்த இடத்தில்
ஊஞ்சல் கடை

வயலிருந்த இடத்தில்
அரிசிமண்டி

கமலாவுக்கு முதல் முத்தம்
கொடுத்த இடத்தில்
அழகுநிலையம்

வேம்பு வாத்தியார்
வீடிருந்த இடத்தில்
மெட்ரிக் பள்ளி

காளை பழக்கிய இடத்தில்
கிரிக்கெட் மைதானம்

இப்படி எல்லாமே மாறியிருந்தது,
மாறாத ஏதேனுமொன்றை
தேடித் துடித்தது என் பால்யம்

நீளும் நினைவுகளோடு
சீக்கிரமாய் வந்துசேர்ந்தது இடுகாடு

அப்பத்தாவை புதைத்துமுடித்து
திரும்பி வரும்போது

எதிரே
மாறாத அதே பழைய சிரிப்போடு
என் பால்ய நண்பன் குமரேசன்

“கல்லறை ஓவியமாய்”

துளசி வேந்தன்





வனத்திலிருந்து
வெட்டியெடுத்துக்கொண்டு போகும்
மரத்தின் பயணம் இலக்கற்றது...
பருமணுக்கேற்றவாறு
அது துண்டாடப்படும்போது
திசையெங்கும் பிரிவு கிளைகளை
பரப்பிச்செல்கிறது
கதவு கட்டில் அலங்கார பொருட்களென பரிணாம
வளர்ச்சி அடையும் போது
முகவரியை தொலைத்த
அகதியை போல்
ஆங்காங்கே இருக்கிறது
இயந்திரங்களில் சிக்கி
கூலாகி காகிதமாகும்போது
பல குறிப்புகளை சுமக்கிறது
எப்போதாவது தன் பயண
குறிப்புகளையெழுத விழைகிறது...
அப்போதுதான் ஒரு கவிஞனின்
விரல் பிடித்துக்கொள்கிறது....

க. அய்யப்பன்

கடலாகி விட்ட
என் மீன் தொட்டிக்கு
கடவுளும் நீ தான்
சாத்தானும் நீ தான்.

தீபிகா நடராஜன்

நெருப்பின் வெளிச்சம் மிரட்சியான கனவானது
விலங்கிற்கு.....

மார்கழிக் குளிரின் தாக்கத்திற்கு தப்ப
நுரையீரல் புகை நிரப்பும்

ஒருவனின் சிறு தவறுக்கு
காடு எரிந்து போவது போல்......!!

பார்வதி பாலசுப்ரமணியம்

# கூடுதுறை ஞாபகங்கள்



பனி பொழியும்
யாமம்

நேற்றைய மொழிதலின்
உணர்வுகளை விழிகளுக்குள்
கோர்த்து மூடுகிறேன்

உள்ளே சுவாசமாய் நிறுத்தி
யாசிக்கிறேன் உயிர் வளியை

கரையைத் தொட்டுவிடத் துடிக்கின்ற
தளும்பும் கடலலையாய்
மனது

மெள்ள எட்டிப் பிடித்துத்
தொட்டு விடுகையில்
பெருங்குவடாய் ஏக்கங்கள்

பல்கிப் பெருகி
கைகால் முளைத்து விரிந்தெழுகிறது
சிறு பரட்டையென

ஒரு நொடி நெருப்பாகவும்
அந்நொடியே நீராகவும்
கலைக்கவும் சமைக்கவும் செய்கிறாய் என்பதை
நீர்ச் சொறியும் ஈர விழிகள்
பறையடித்து முழங்குகின்றன
சத்தமின்றி

கூடுதுறை ஞாபகங்களில்
ஒடுங்க ஆரம்பிக்கும் அக்கணத்தில்
முணுமுணுக்கிறது காதினுள்
உனது வியாக்கியானக் குரல்
இதோ
விடிகிறது மற்றொரு நாளென்று

வைகறைப் பொழுதினில்
மெல்லத் தழுவுகிறது என்னைத்
துயில்.

ப்ரியா பாஸ்கரன்



பேருந்து நிலைய
பிளாட்பாரத்திலோ
சாலையின் நடைபாதையிலோ
அல்லது
ஏதேனுமொரு படிக்கட்டிலிலோ
அழுக்குப் படிந்த ஆடையில்
தூங்கும் குடிகாரனைக் கண்டு
அலட்சியப்பட்டுக் கடக்கும் மனம்
அவன் தூக்கத்தின் மீது மட்டும்
ஒரு கணம் நின்று
பொறாமைபட்டுக் கொள்கிறது

மகேஷ் சிபி

குழம்பாத குட்டை
குழப்பத்தில் நிற்கிறது
கொக்கு ஒன்று.

அன்பழகன்ஜி

யாருமற்ற இடங்களில்
யாருமில்லையென
எப்படி
சொல்லி விட முடியும்
இந்த புதர் செடியின்
பூக்களை சுற்றும்
வண்டுகளின் சத்தம்
காதை பிளக்கிறது

ச.ஜெய்

# முகவரி



நிதானமாகத்தான்
காரில் ஏறிச்சென்றார்கள்
கல்யாணத்துக்குப் பின்பான
வருடங்களில்
கடல் பார்த்த அடுக்ககத்தில்
குடியேறிக்கொண்டார்கள்
கான்வென்ட் படிப்பில் பிள்ளைகள்.
ஒன்றுக்கு இரண்டு வாகனம்
வாரம் ஒருமுறை அவுட்டிங்
பதட்டமில்லா வாழ்வை
பகட்டுகளின்றி ருசிக்கிறார்கள்.
வீட்டு வேலை செய்பவளின்
பிள்ளையின் கல்விக்கும்
பிரியமாய் உதவுகிறார்கள்.
எனினும்...
கூடவே துரத்துமொரு வெறுமையை
அடிக்கடி புசிக்கிறார்கள்
கூடு விட்டு
வெளியேறிய செய்தி தெரியாமல்
வருடங்கள் கழித்து வந்த
பள்ளித் தோழியொருத்தி
அழுக்கேறிய ஆடையுடன்
அமர்ந்திருந்த ஆசாமியிடம்
அவளது விலாசம் கேட்க
காதில் செருகி வைத்த
அணைந்த பீடியை
தேய்த்து கொளுத்தியபடி
யாரு...
அந்த ஓடிப்போனவ வீடா என
அருவருப்பாய் கேட்ட கேள்வியில்
ஊரின்
மொத்த முகமும் தெரிந்தது...

சந்துரு ஆர்.சி.

# வேண்டுமொரு காடு



உணர்வுகளின் முள் தைத்து
கிழிந்த இதயத்தின்
மௌன முகாரியை புதைத்து
நீலாம்பரியில் கண் துயில
வேண்டுமொரு காடு!

தேவைகளிலிருந்து கழண்டு
கதிரெழுந்தப் பின்னும்
புல்வெளியில் பனித்துளியென
உறங்க வேண்டுமொரு காடு!

சலசலக்கும் மனமொதுக்கி
மனிதருமொதுக்கி
மூங்கிலுரசும் ஒலியிடை
மௌனத்தின் ஒரு துளி ருசிக்க
வேண்டுமொரு காடு!

மனம் தின்னும் கவலை விட்டகன்று...
அக்காகுருவி சூளகாக்கை
ஆக்காட்டி பனங்காடை
ஆடி நடக்கும் மைனா
கூடி பறக்கும் சிலம்பன்
விழியில் தீயுருட்டும் செம்போத்து
இலை குருவி மாங்குயிலோடு
பறக்க வேண்டுமொரு காடு !

வான் தந்த அதிசயத்தால்
வனத்தின் ரகசியத்தை
வழியெங்கும் முணுமுணுத்து
வேரெங்கும் பயணித்து
நீளுமொரு ஆறோடுஅளவாளவி நடக்க
வேண்டுமொரு காடு !

கடம்பும் பிள்ளைமருதும்
வெண்தேக்கும் ஈட்டியும்
அடர்ந்தொரு வனப்பேழையில்
பச்சைய மணம் நுகர்ந்து கண்ணயர
வேண்டுமொரு காடு!

விடு விடு எல்லாவற்றையும் விடு
மரத்தினடி வேரில் மனமற்று
சும்மா உட்கார்ந்திருக்க
வேண்டுமொரு காடு !

கோ.லீலா



நேற்று வரைந்தேன்
மானை.

இன்று வரைந்தேன்
புற்களை.

நேற்றுக்கும் இன்றுக்குமான
இடைவெளியில்
கிடந்தது பசி.

துரை. நந்தகுமார்

இறந்த அப்பாக்கள்
நட்சத்திரமாகிவிடுவார்களென
யாரோ சொல்ல கேட்ட
இரவொன்றில்,
தேடிக் கொண்டிருக்கிறேன்
வானமெங்கும்,
என்னைத் தேடி வாசலில் வந்து நிற்கிறான்...மகன்!

மு.முபாரக்

மிச்சம் வைத்திருக்கும்
இரவின் வெளிச்சங்களில்
விழிகளைப் பழக்கிக் கொள்கிறேன்
காலுக்கடியில்
இப்போதுதான் ஏதோ ஒன்று
ஊர்ந்து போனதாய் உணர்வு
விரல்களோரம் நழுவிடத் தொடங்கிய
அச்சத்தை
அழுத்தித் துடைக்கிறேன்
துளியென வீழ்ந்த அதனை
ஒரு
பொறுமையில் பிடிக்கப் பாய்கிறேன்
மெதுவாகச் சிரித்துவிட்டு நகர்கிறது
அச்சத்தின் மறுபக்கம் ஒன்று!

முனியாண்டி ராஜ்



ஒரு துரோகம்
அழகாகத்தான்
சிரிக்கிறது
ஒரு துவேசம்
நிதானமாகத்தான்
வெளிவருகிறது
ஒரு கைவிடுதல்
அழுகையினூடேதான்
நிகழ்கிறது
இருந்தாலும் என்ன
வாழ்வு
வலிகளோடு மட்டும்
எப்போதும்
இருப்பதில்லை
பாலையின் சிறு மழை
ஒன்றின்
கருணையை
அது
தரத்தான் செய்கிறது..
அந்த மழைக்கான
செடியாகத்தான்
இந்த வாழ்வும்
காத்திருக்கிறது
ஒரு துளி ஈரத்திற்காக...

**மகிழினி காயத்ரி**

மகள் சாயலிலிருக்கும்
நாயகியின் மகள் அழுகிறாள்
நானும் அழுகிறேன்
மரத்தைப்
போலச்செய்யும் கொம்பையும்
பற்றிப் படரும் கொடி.

**காயத்ரி ராஜசேகர்**



சின்ன விஷயத்தைக்கூட
ஊதி பெரிதாக்கிவிடுகிறார்
பலூன் வியாபாரி!

நேசன் மகதி

முகம் நோக்கியும்
புன்னகைக்கிறாய்
முதுகு நோக்கியும்
புன்னகைக்கிறாய்
இரண்டு புன்னகைகளுக்கும்
இடையில்
ஆறல்ல
ஒரு வித்தியாசம் தான்
முகம் காட்டுகிறது
ஒன்றில் பாசம்
ஒன்றில் வேசம்
என்னை களங்கப்படுத்துவதில்
உனக்கு மகிழ்ச்சி எனில்
எனக்கும் மகிழ்ச்சி தான்
புரியாமல் உனக்குள்ளே
நீ முட்டி மோதுவது
எனக்குப் புரிகிறது
எதிர்பார்ப்புகளற்றது
எனது அன்பு
என்னை உன்னால்
புண்படுத்தவே முடியாது
எதையும் கடந்து செல்வேன்
முகஸ்துதிகளால் அல்ல
அவமானங்களால்
பண்பட்டவன் நான்...

ஐ.தர்மசிங்

நானாகத்தான் இருந்தேன்
யாரைப் போலவோ
எதைத் தேடியோ
ஓடத் தொடங்கிய நாள்முதல்
தொலைதூரமாகிப் போகிறேன் என்னிலிருந்து...
கைவிடப்பட்ட என்னை
எப்போதாவது தேடுகையில்
ஆறுதலாய்
தென்படுகிறார்கள்
என்னைப்போல் யார் யாரோ...

வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



ஒன்றாய் அமர்ந்து தேநீர் அருந்திய
ஞாபகங்கள்
நெடுங்காலத்திற்குப் பிறகும்
விரிசல் விழுந்த திண்ணையில்
அப்படியே அமர்ந்திருக்கின்றன.

தாழ்வாரத்தில்
அதே புன்னகையோடு
தண்ணீர் தொட்டியை எட்டிப் பார்க்கிறது
வெள்ளை நிலவு.

கூடத்தின் ஓரத்தில்
விளையாடிய ஆட்டுக்கல் உரலை
பெயர்த்தெடுக்காமல்
விட்டு வைத்திருக்கிறார்கள்.

சரிந்திருந்த ஓடுகளின் வழியே
குதூகலத்தில் நனைத்த
அதே மழை நீர்
கசிந்து கொண்டிருக்கிறது.

சமையலறை புகைக்கூண்டில்
ஒட்டடையின் பின்னல்கள்
அப்போது போலவே
இழையோடுகின்றன.

முன்கட்டு நடை முதல்
ரேழி தோட்டம் வரை
எதுவும் மாறாத
பாழடைந்த வீட்டில்
மொத்தமாய் மாறி இருக்கிறாள்
சிறு வயது சிநேகிதி...

'நீ 'என்பதற்கு பதிலாக
என்னை அடிக்கடி
' நீங்கள் ' என
குறிப்பிட்டுப் பேசும்போது.

**தி.கலையரசி**



இன்னும் யாவாரம் முடியல.
சந்தைக்குப் போயி வாங்கியாந்த
காய்கறி அம்புட்டும் விக்காம கெடக்கு

பேரம் பேசி தாவு தீர்ந்து கூப்பாடு
போட்டு பாதி விக்கறதுக்குள்ள
மதியம் கொண்டு வந்த கஞ்சி
தூக்கு காலியாயிடுச்சி

பக்கத்துல இளஞ்சோட்டு புள்ளைவ
எல்லாம் சிரிச்சி பேசி எப்படியோ
கூட்டிக் கொறைச்சி வித்துடறாளுவ

ஒரு ரெண்டு ரூவா தான் அதிகம்
சொல்லுதேன்.போணியாகல.
பொழுது சாயக்குள்ளே கைக்காசு
வாங்கிட்டு சுடுசோறு போடுவா மவ.

ரொப்பிக்கிட்டு குடிசை திண்ணையில சாக்கைப்
போத்திட்டு
சுருண்டு கெடக்கணும்.இந்த முறை
பண்டிகைக் காசு தந்தா
இரண்டு போர்வை ஜமுக்காளம் கேக்கோணும்னு
இருந்தேன் பிள்ளைகிட்ட...தரலைன்னு
பிள்ளை சொல்லுறான்.பனியும்
பசியும் கொல்லுது மெல்ல முடியல
எதையும்...

**உமா மஹேஸ்வரி பால்ராஜ்**

நனையாமலே குளிரில்
நடுங்குகிறது நதியில்
விழுந்த நிலவு.!

**த. ரவீந்திரன்**



●

நீ அழுவதை இரசிப்பதை விடவும் கொடூரம்
இல்லை தான்
ஆயினும் அது
எனக்கான ஆராதனை எனும்போது
இரசிக்கத்தான் செய்கிறது
குரூர இதயம்

மன்னித்தருள்வாய்
தானே

●

எது இலக்கியமெனத்
தொடங்கிய சண்டையிலிருந்து
பேச்சை முறித்துக் கொண்டவள்
புத்தாண்டுக்கு
ஸ்மைலி அனுப்பியிருந்தாள்
அது
இலக்கியமாய் இருந்தது

●

வருடம் தவறாமல் வந்துவிடும்
வருடத்துக்காக
வருடம் தவறாமல் வந்துவிடுகிறது
மறந்துவிட்ட
பிரியமொன்றின்
பிரார்த்தனைக் குறிப்பு

●

கடைசி நாள்
கடைசி நிமிடம்
கடைசி நொடி
கடைசி ஸ்டேட்டஸ்
கடைசி முகநூல் பதிவு
கடைசி முத்தம்
கடைசி கூடல்
கடைசி பானம்
கடைசி கவிதை
கடைசி டின்னர்
இந்த வருடத்தை இப்படியே கைகழுவிக் கடந்துவிட
நினைப்பவனுக்கு
இன்னுமொரு வாழ்விருந்தால் பரவாயில்லை
நினைவு தோய்ந்த இவ்வாழ்வை கடைசியாக்க
முடியாமல் மேலே எவ்வளவு தடுமாறுகிறேன்
பாருங்கள்.

●

எனக்கான புதுவருடம்
யாரோ ஒருவரின் விரல்நுனியில் தொடங்குவதாக
நள்ளிரவுக்
குறிப்பு தருகிறது
அலைபேசி நோட்டிபிகேஷன்
எல்லாவற்றையும் புதிதாய் தொடங்க ஆசைதான்
சரியாய்
12.00க்கு ஒருகணம் நின்றெல்லாம்
சுற்றவில்லை பூமி.

●

நாம் இலக்கியத்தைப் பற்றித்தான் பேசிக்
கொண்டிருந்தோம்
நம் மனம் திருட்டுப்பூனையாய் சொற்களை உள்ளே
உருட்டிக் கொண்டிருப்பதை
நீயும் உணர்ந்த கணத்தில்
இரண்டு உரையாடல்களுக்கு நடுவே
கனத்துப் பெருகும்
மௌனத்தில் தான்
வெளியேறுகிறது அதன் கிசுகிசுப்பான குரல்.

ந.சிவநேசன்



எல்லோரும் ஊருக்குப்போய்விட்ட
ஆட்கள் யாருமற்ற வீட்டில்
பியானோ கட்டைகளின் மீது ஓடும்
பல்லியொன்று இசைக்கிறது
வீட்டின் தனிமைக்கான பாடலை

பெருவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட ஊரிலிருந்து
கொஞ்ச நாட்கள் கழித்து
கரையொதுங்கிக் கிடக்கும்
புல்லாங்குழலுக்குள் நுழைந்த காற்று இசைக்கிறது
ஒரு பேரழுகையின் இசையை

மீட்டப்படாது
மூலையில் வைக்கப்பட்டிருக்கும்
வீணையின் நரம்புகளுக்கிடையே
மெல்லிழைகளால் வலைகட்டும்
சிலந்தியொன்று
வீணையை இசைத்து இசைத்து
அதன் சோகத்தை வெளியேற்றுகிறது

எந்த மாட்டின் தோலோ
எப்போது இசைக்கப்பட்டதோ
பாழடைந்த வீட்டின் மூலையில்
ஒதுங்கிக்கிடக்கும்
தப்பட்டையின் மீதமரும்
வண்ணத்துப்பூச்சியின் கால்கள்
இசைக்கின்றன
உழைத்துக் களைத்தவன்
கள் குடித்துவிட்டு
உற்சாகத்தில் தட்டிய இரவு இசையை

எங்கே
இசை கேட்கவில்லையே
என ஐயுறுகிறீர்களா?
காதுகளைப் பொத்திக்கொண்டு
இசைகளைத் தேடும் உங்களுக்கு
ஒருபோதும் இந்த இசை கேட்காது

சௌவி



வானக்குடையின்
கீழ்
நனையாமல்நகர்கிறது -
மேகம்

மடிநிறைய பால்
கறக்கத்தான் ஆளில்லை-
கள்ளி

கரங்களில்லை
நகங்களில்லை
கழுத்தை நெரிக்கிறது-
கடன்

குவளை முழுக்க
பால்
குடிக்க அனுமதியில்லை -
கன்றுக்கு

கழுத்தளவு தண்ணீர்
கரையேற முடியவில்லை -
நாணல்

வீட்டில் பசி
விரல்தோறும் மோதிரம்
விற்க முடியவில்லை-
நடிகன்

அழ. இரஜினிகாந்தன்

அன்புள்ள என்று துவங்கிய கடிதங்கள்
எச்சில் தொட்டுத்தான் ஒட்டப்பட்டிருந்தன....

கதிரவன் வீ



ஒரு குளுமையான சூரியனை
மகள் வரைந்து கொண்டிருக்கிறாள்...
இதுவரை பழகிக் கொண்ட
வெப்ப சூரியன்
மனதிலிருந்து மெல்ல மறையத் தொடங்குகிறது...
ஆசிரியத்தை எப்போதும் சேர்க்கும் அவள்
இப்போது காகித கப்பல் ஒன்றை
வடிவமைத்து கொண்டிருக்கிறாள்...
சிறிதும் தயக்கமின்றி சூரியனை
அதில் அமர வைத்து புன்னகைக்கிறாள்...
அருகில் இருந்த எனக்கு என்ன
செய்வதென தெரியாமல்
அவளோடு
காகித கப்பலில் அமர்ந்து கொண்டு
அவளோடு பயணமாகிறேன்...
பட படப்போடு இன் நேரம் நான்
கடந்திருக்க வேண்டிய தொலைவு
பற்றி எல்லாம் அவளுக்கு கவலையில்லை...
உயிர் பிழைக்குமா காகித கப்பல்
என்ற அச்சமும் அவளுக்கு
இல்லாது இருந்தாலும்...
என் வாசல் அருகில் வரை வந்து
இரக்கி விட்டது தான் ஆச்சரியம்...
நானும் இப்போது குளுமையான
சூரியனை
அவள் அம்மாவிற்காக செய்ய
தயாராகிறேன்...

செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமார்



கூடல் ஊடலில் முடிந்த நாளைப் பற்றிய குறிப்புகள்
முன்னெப்போதும் இல்லை

ஒரு நாளை குதூகலத்துடன் தொடங்கிவைத்த
கூடலுக்குத் தெரியாது
அன்றிரவே நிகழவிருக்கும்
சொற்சமர்
சோகத்தில் ஆழ்த்துமென்று

மன மூலையில் படுத்தபடி
வால் முனையை சுழற்றிக்கொண்டே இதனை
கவனித்திருக்கும்
முற்றும் உணர்ந்த காதலும் காலமும் ஒன்றே தான்

சுசித்ரா மாரன்

குடுவையில் எஞ்சிய
கடைசி மிடரை எந்த
ரசனையுமின்றி உறிஞ்சிக்கொண்டிருந்தவனின்
உள்ளங்கை பற்றாத சில
சங்கடத்தின் முகங்கள் நழுவிகொண்டிருந்தது
நாவாசைக்க
புழுங்காமல் ஒதுக்கிய
பற்றற்ற ஓர் சொல்லிடம்
சலசலக்கிறது தளர்ந்த
வாழ்வு

ஜபீர்



யாரோ ஒருவருக்கு நாமென்பது ஒரு டெடி பியர்
யாரோ ஒருவருக்கு நாமென்பது ஒரு பழைய புகைப்படம்
யாரோ ஒருவருக்கு நாமென்பது ஒரு வளர்ப்பு நாய்
யாரோ ஒருவருக்கு நாமென்பது ஒரு நிறைவேறாக் கனவு
யாரோ ஒருவருக்கு நாமென்பது ஒரு ஏடிஎம் அட்டை

இதோ
இப்போது
நாமென்பது வெறும் எண்களாகி
இந்த சைபர் வெளியில் குடியேறி
எவ்வளவு நாளாயிற்று?

இருக்கும் இடங்கள் தொலைத்து
அணைக்கின்ற உடல்கள் தொலைத்து
உணர்கின்ற ஸ்பரிசங்கள் தொலைத்து

இறுதியில்
நம் இருப்பும் இன்மையும்
அணைந்து ஒளிரும் ஒரு பச்சை விளக்கில்தான்
தங்கியிருக்கிறது
என்பதை நினைக்க
அவ்வளவு கசந்து விடுகிறது!!!

ரிஸ்கா முக்தார்

வண்டிச்சக்கரத்தின் அடியில்
சிக்குண்டு உடையும் பெருங்கல்லை போன்றதொரு
பொழுதொன்றில்

சாயம் போன ஓடுகள்
வரிசையற்று சிதைந்த
நாட்களின் கனவு வண்ணம்
நினைவில் இல்லை

டவுசர் பையில்
ஊறவைத்த அரிசி
வாயில் மென்ற கணத்திலும்

மாட்டு வண்டி குலுக்கி
மண்டை முட்டிய போதும்
அவள் பார்வையில்

வெயில் தோளில்
முகத்தில் சூடு
வைத்த போதும்

எப்பொழுதும்
முள் பூக்கவே இல்லை

யாழ் எஸ் ராகவன்

# பொங்கல்



இதழ் திறந்து இரைதேடும்
கூட்டத்தில்
பதர்கள் மட்டுமே
சிக்கித்தொலைகிறது
எளிதில்
முன்னறிவிப்பின்றி வரும்
காலத்தின்
நிகழ்த்துதலில்
நீந்துதல் யென்பது
பெருவாழ்வு
வலைப்பின்னலில்
சாமர்த்தியத்தை
தூண்டிலில் சிக்கியதற்கு
விதியென
பெயர் வைத்துவிட்டு
வீசியெறிகிறார்கள்
அன்றாடங்களை....

கருவை ந.ஸ்டாலின்

உழைப்பை சுரண்டாத சூரியன்,
லாபத்தில் பங்கு கேட்காத ஆறு,
குத்தகையின்றி கொட்டி தீர்த்த மழை,
வயல்களில் கொல்லப்பட்ட பூச்சிகள்,
பயிருக்காக அழிக்கப்பட்ட களைகள்,
உரமுண்டு வாழ பழகிய மண்புழுக்கள்,
தலைமுறை உருவாக்க முடியாத விதைகள்,
இயந்திர உழவில்
சாணம் எதிர்பார்த்த நிலங்கள்,
இவைகள் நடுவே ,
நியாய விலைக்கடை பச்சரிசியில்
பொங்கல் பொங்க....
விவசாயிகளின் கோசம்
பொங்கலோ பொங்கல்...

சிவனேஷ்

வீணென்று
வீதியில்
வீசியெறிப்பட்ட காகிதம்

ஒருநாள் பட்டம்
ஒருநாள் கப்பல்

அறுந்தோ
கவிழ்ந்தோ விடுவதில்லை
குழந்தைகள்.

குமரன்விஜி

# மீண்டும் மஞ்சள் பை



பழுப்பேறிய
சாதகக்குறிப்புகளைச்
சுமந்துகொண்டு.
தாத்தா காலத்திலது
தரகா□கள் கையிலிருந்தது
அதில்தான் அப்பா
நன்கொடை ரசீதுகளையும்
நோட்டீசுகளையும்
திணித்துக்கொண்டு
சங்கவேலை பார்ப்பார்.
பேனா கொட்டிய மை கறையோடு
கோனார் நோட்சும் புத்தகங்களுமாய்
காதறுத்த அந்தப் பையோடுதான்
கடந்ததென் பால்யங்கள்.
பால்பாக்கெட்டுக்கு
கேரிப்பை கேட்கும்
கோரிக்கைகள் நிராகரிக்கப்பட
மீண்டும்
வண்டிக்கவரில் வந்தமர்கின்றன
மஞ்சள் பைகள்

**காசாவயல் கண்ணன்**



"நீ என்னை
புரிந்து கொள்ளவே
மாட்டாயா?" என்று
கூச்சலிட்டு இருக்கிறேன்

"எனக்கு பசிக்கவில்லை"
என்று முகம்
திருப்பியிருக்கிறேன்

"நான் யார் உனக்கு
என் கிட்ட ஏன் பேசுற"
என்று எரிச்சலூட்டியிருக்கிறேன்

"நீ என்னை நேசிக்கவில்லை
பொய் சொல்கிறாய்"
என்று நோகடித்திருக்கிறேன்

ஆனால்
இந்த
கோபத்தில் உளறும்
உளறல்களை
கோபமென்று கொள்ளாமல்
அன்பென்று
புரிந்து கொள்ளும்
ஒருவர் வாழ்வில்
கிடைப்பதும் பெருவரம் தான்
இல்லையா..?

சில சமயங்களில்
கோபம்
கோபமில்லை
அது
அன்பின் ஆக்ரோஷம்..

அலர்மேல்மங்கை



ஒரு விபரீத விநாடியில்
நான் மரித்துப் போனேன்

புதைப்பதா எரிப்பதா
என்ன செய்ய
அனர்த்தமாக யோசிக்கையில்
துளிகள் உடைந்து தெறிக்க

அம்மா ஏன் அழுகிறாய்
எனத் திகைத்த மகனிடம்
நீ வேறிடம் போகிறாய் அல்லவா
என்னை விட்டு என்றேன்
புரியாது விலகினான்

அம்மா என்ன பிரச்சினை
உனக்கு இப்போது
பெண்ணுடைய அலைபேசி
அதிர்ந்து அழைத்தது கேள்வியாக
நீ அருகில் இல்லையில்லையா
தங்கம்...
அதனால் இருக்கலாம்
அக்கறையும் எரிச்சலும்
கலந்த படபடப்பு சிறிது நேரம்
பிறகு 'டொக்'
புளித்துப்போன அமைதி

நான் இறந்ததை
யாருக்கெல்லாம் அறிவிக்க..?
அவசரமாக தொடர்பு எண்களைத்
தேடி அழைக்கப் போன
அபத்தத்தின் நடுவே
எனக்கு டீ தரலையா
கணவரின் குரல்
இஞ்சி சேர்த்தா..? எழுந்தேன்

தேநீர் கொதிக்கையில்
உடன் குமிழிட்டது நினைவு
யாருக்காக மரித்தேனோ
அந்தப் பெயர் நினைவில்
வரவேயில்லை

எங்கே அந்த நினைவு
சூட்டுக்கோலிட்டு இழுத்தால்
இழுத்துப் பார்த்தேனே....
எரியத்தான் எரிகிறது?
பின்...
எப்படி இறந்தேன்?
எதற்காக இறந்தேன்?
எவருக்காக இறந்தேன்?

நிலைக் கண்ணாடியில்
பார்த்தால் தெரியுமில்லையா?
சதைப் பிண்டம்
கோளமாகத் தெரிய
நரம்பதிர்ந்த துடிப்பில்
வெடித்துச் சிதறியது
அடைத்துப் போன இதயம்

ஏன் இப்படி அழுகிறாய்?
எல்லோரும் கேட்கையில்
சைகையில் கதறுகிறேன்
நான் இறந்தது தெரியலையா?

யாருக்காக எதற்காக இறந்தாய்?
பதிலிறுக்க இயலாத கேள்வியால் துளைக்கிறார்கள்

நினைவில்லையே....
யாருக்காக இறந்தாலென்ன
நான் இறந்தது உங்களுக்கு முக்கியமில்லையா?

தோள் குலுக்கி உதடு பிதுங்க
அனைவரும் உச்சுக் கொட்டி நகர்ந்த நொடியில்
நான் உண்மையாகவே
மரித்துப் போனேன்.

ரத்னாவெங்கட்

# சர்ப்பக் கனவு



நெகிழி போத்தலில் நான்கு நெகிழி கரண்டிகள்
கார்ப்பரேட் கலப்பட பால் மாவை கொட்டி
கால் வாசி சுடுநீரை நிரப்புமவள், மூடியைத்திருகி
பின் முலைக்காம்பைப் போலவே
வடிவமைக்கப்பட்டுள்ள
உறிஞ்சானின் துளைப்பகுதியை
கட்டைவிரலாலும் ஆட்காட்டிவிரலாலும் இறுகக்கவ்வி
மீதமுள்ள வலதுகையின் மூன்று விரல்களால்
போத்தலணைத்து
அதை மேலும் கீழும் உலுக்குகிறாள்.
பின் விரல்கள் விடுவிக்கையில்
காம்பிலிருந்து பீறிட்டடிக்கிறது செயற்கை பால்.
மீண்டும் போத்தல் திறக்கப்பட்டு
இம்முறை ஆறிய நீர் முழுவதும் வழித்து
ஆதியும் செய்தது போலவே உலுக்கி
அழும் சிசுவின் வாயில் ரப்பர் காம்பை
திணிக்கிறாள்.

பிரசவிப்பதற்கு முந்தைய பின்னிரவுகளில்
தன் கொடூர சொப்பனங்களில்
இருட்டின் நிறமுடைய சர்ப்பம்
தன் கொங்கைகளை மாறி மாறி கவ்வுவதையே
வாடிக்கையாக கண்டிருந்தாள்.
சிசுவும் சர்ப்பத்தின் நிறத்தையொத்திருந்ததால்
மருத்துவரிடம் அழுது மன்றாடி ஹார்மோன்
குளிகைகளால்
சுரப்பதை துண்டித்திருந்தாள்.

இப்போதெல்லாம் தன் சொப்பனங்களில்
அவள் சர்ப்பத்தை காண்பதேயில்லை. மாறாக,
சிறு குன்றுகளாக காட்சியளிக்கும் இரு 'புற்று'கள்.

வலங்கைமான் நூர்தீன்



கிடை ஆடுகளே கதி என்று கிடக்கும்
அம்மாவும் அப்பாவும்
மாதம் மூன்றோ ஆறோ கழித்துதான் யாரோ
ஒருவர் வீடு திரும்புவார்கள்

அப்பாக்கு தான் அணிந்திருப்பது அழுக்குச் சட்டை
என்றெல்லாம் தெரியாது.
ஆனாலும் அழுக்கில்லாமல் இருப்பார்.

அக்கா இருவரும் நானும்,
அப்பாவோ அம்மாவோ வீடு வந்தால்
ஆனந்தக்கூத்தாடுவோம்

மீண்டும் அப்பா கிடைக்குத்
திரும்புகையில் அழுக்குச் சட்டை வீட்டுக் கொடியில்
கிடக்கும்

அப்பா போனதும் அழுக்குச்சட்டையை நான்
மாட்டிக்கொள்வேன்
அப்பாவின் வியர்வை வாசம் பீர்க்கம் பூவைப் போல
இருக்கும்.
அப்பாவின் சட்டையைப் போட்டதுமே
ஆணில்லா வீட்டில் நான் ஆம்பளையாக
மாறிவிடுவேன்
அக்காக்கள் இருவரும் எனக்கு மகளாக
மாறிவிடுவார்கள்

இப்படி அம்மா வந்துவிட்டு போனால் இன்னும்
இரண்டு அம்மாக்கள் என்னோடு இருப்பார்கள்.
நான் ஒற்றை இளவரசனாக வீட்டை
வளம்வருவேன்.!

வெற்றிச்செல்வன்

# சிற்றுயிர் பேணல்



•
சாமி எறும்புகள்
பூமியில் எழுதும்
வாழ்வின் சமன்பாடுகளை
வாசித்துப் பார்க்காமல்
வனங்களைச் சுரண்டும்
மடாதிபதிகளின்
அரைவேக்காட்டு
கதையாடல் கேட்க
பணம் கட்டிக் காத்திருங்கள்

•
எந்தக் கள்ளமுமின்றி
மும்முரமாக இணையோடு
முன் சரசங்கள் புரிகிறது
சுவர்ப்பல்லி
உள்ளிருக்கும் முட்டையைக்கூட
ஒளித்து வைக்காத
திறந்த புத்தகமது
அதன் விழுதலுக்கும்
சத்தத்துக்கும்
அர்த்தம் தேடி அலைவதெல்லாம்
அறிவுஜீவிகளாகிய நாம் தான்

•
நிராயுதபாணியாய்
மல்லாக்கப் படுத்து
மன்றாடுகிறது
அதன் மீது
அப்படியென்ன காழ்ப்புணர்ச்சி
மோனோகுரோட்டாபாஸை விட
மோசமானதல்ல
ஒழுங்காய் பறக்கக்கூடத் தெரியாத கரப்பான்பூச்சி..

•
கட்டுத்தறியில்லாத
பட்டு நெசவாளி
வாயும் காலுமே
வாழ்வின் மூலதனம்
தேவைகள் அதிகமில்லை
தேடிச் செல்வதுமில்லை
அதிக ஆசையில்லை
அன்றைய அப்பம் போதும்
எண்ணமும் இருப்பிடமும்
எப்போதும் உயரம்
அந்த அரண்மனைக்குப் பெயர்
சிலந்தி வலை

•
நறுக்காத மீசை துடிக்க
முறைத்துக் பார்க்கிறது
இரண்டு பொறிகளிலும்
இன்னமும் அகப்படாத எலி
ஆதிக்குடிகள் வாழ்ந்த
அழகான வளைகளை
அத்துமீறி ஆக்ரமித்து
அடுக்ககம் கட்டிக் கொண்டதில்
எழுந்த ஆவேசமாம்

•
கூராய்வு செய்தது போல்
மாடிப்படியில்
துண்டு துண்டாய்க் கிடக்கும் தும்பியின்
கண்ணாடி றெக்கை வழியே
துல்லியமாய்த் தெரிகிறது
மரணத்தின் ஒற்றையடிப்பாதை

வில்லியம்ஸ்



முகமற்றவனின் சாயலில்
எனதுமுகம் இருப்பதாய்
தோன்றுகிறதெனக்கு

அருகிருக்கும் எவருமிதை
அவதானிக்கவில்லை
அதனாலேயே
அவ்வாறு படுகிறதெனக்கு

அன்புகாட்டி நிற்கும்போதும்
வம்பைச்சுட்டிக் காட்டும்போதும்
எதிர்ப்பை இயல்பாக்கும்போதும்
தெம்பிழந்து வாடும்போதும்
புரிதலுக்குட்பட்ட நிலையில்
எவருமில்லையென்பதை
உணரும் தருணங்கள்
அதிகம் வாய்க்கிறதெனக்கு

அதனாலேயே
முகமற்றவனின் சாயலில்
எனதுமுகம் இருப்பதாய்
தோன்றுகிறதெனக்கு.

**மயிலாடுதுறை இளையபாரதி**

மருமகள் சொன்ன மசாலா பொடியை கேள்வி
கேட்காமல் சரியென்கிற மாமியார்..
மொத்தகுடும்பமும் புன்சிரிப்போடு ஒரே கடையில்
சிரித்தபடி துணி எடுக்கிறார்கள்
சாக்லேட் கொடுத்தவுடன் காதல் பிறக்கிறது
விளையாட்டு வீரனாக பூஸ்ட் போதுமானது
ஒரே தேய்ப்பில் துணிகள் பளிச்சிடுகின்றன
குளியல் சோப்பு வீரத்தை கற்று கொடுக்கிறது..
நகராமல் குளப்பி அருந்தினால்
ஆறு ஒட்டங்கள் எடுக்கிறது நமது அணி
லுங்கியை பாராட்ட அழகிகள்
பின்தொடர்கிறார்கள்.. கடைசிவரை
சாமானியன் வாழ்வியலில் எதிர்படுவதேயில்லை
பரமபத விளம்பரத்தில் காட்டுகிற விலையும்
காட்சிகளும்..

**ஆனந்தகுமார்**

கோவில் மரத்தில்
தொட்டில் குழந்தைகள்
பாரம் தாங்காமல்
தாழும் கிளை.

**கவி. விஜய்**



மூன்றாம் கிளாஸ்
முன்னிரவு டியூசன்
முடிந்து வரும்போது
யார் இழவு வீடோ
கடக்கும் போது
காற்றில் வந்து
நாசி நிமிண்டிய
அதே தாழம்பூ ஊதுபத்தி
பெரியவள் அம்மை வந்துபோனபின்
மரபெஞ்சோரம்
அம்மா கொளுத்தி செருகின
அதே ஊதுபத்தி
பின்னொரு மாட்டு வண்டி இழுக்க
கோலாகல
கருட வாகன உற்சவருக்கும் அதே.
அப்பா செத்த பின்பும்
சொல்லி வைத்தாற்போல அதுவே.
பாட்டியின் பத்தன்று
பாட்டி படத்தின் முன்னர் வாழைப்பழத்தில்
அசூயையாய்
செருகி புகை கிளப்பியதும் அதே
பத்தாயிரம் சதுரடி
சூப்பர் மார்க்கெட்டில்
ஒரு ஊதுபத்தியெடுக்க
இத்தனை முகரும் பரிட்சையா
என மோனமாய் நகையாடும்
மார்வற்றிய இளம்பெண்ணே
உனக்கென்ன தெரியும்
கால்கட்டி மூக்கு பஞ்சுருக்கும்
பிணக்காட்சிகள்
என் நாசிவழி இன்றும்
விரித்திட வைக்கும் அந்த
தாழம்பூ ஊதுபத்தி அமங்கலமதை..

கோ.ஸ்ரீதரன்

# வெறும் கை



ஏதுமற்று
நீட்டி கொண்டிருக்கும்
அக்கைகளுக்கு

பற்றிய பின்
ஒரு துளி அன்பு
ஒரு துளி நம்பிக்கை
ஒரு துளி காதல்
ஒரு துளி நட்பு
கிடைப்பதாக ஆனபின்

ஏதும் அற்ற வெறும்
கைகளை கூட பற்றுவதற்கு
தந்துவிடலாமே நாம்

மணிவண்ணன் மா

வீணையின் நரம்புகளைக்
கவனித்திருக்கிறீர்களா
அதை மீட்டும் விரல்களை
அதற்கான பாவனைகளை
சம்மணத்தை
கண்களில் மிளிரும் புன்னகையை
உள்ளூர ஒத்திசையும் இசைக்குறிப்பை
பக்கவாத்தியங்களின் மீதான
துளிக் கவனத்தை
இரு மீட்டல்களுக்கிடையே
உலவும் மௌனத்தை
அட்சரப் பிசகைக் கடக்கும் லாவகத்தை
அடுத்த ஆலாபனைக்கான முன்னகர்வை
அடம்பிடித்து அடக்கி வைக்கப்பட்ட
குழந்தையிடம் எழும் முனகலைப் போல
இசைக்குழுவில் வீணையின் சரடு
ஒலிக்கும் போது
எவ்வளவு துடித்துப் போயிருப்பார்கள்
காயத்ரியும் சிட்டிபாபுவும்?

மா.காளிதாஸ்



ஆயிரம் காந்திகள் பெயர் கொண்டவர்கள்
தென்னகத்தில் உண்டு
பாரதியின் பெயர் கொண்ட
ஒற்றை மனிதனை வடக்கில்
உங்களால் காட்ட இயலுமா..?

ஓராயிரம் சுபாஷ் சந்திர போஸ்கள்
தமிழ் நிலப்பரப்பில் உண்டு
பூலித்தேவன் பெயர் கொண்ட
ஒருவரை நீங்கள் வடநில பரப்பில்
அடையாளம் காட்ட முடியுமா..?

பல ஆயிரம் அம்பேத்கர்கள்
இன்னும் தமிழகத்தில் உண்டு
ஒரேயொரு தீரன் சின்னமலையின் பெயர் கொண்ட
ஒருவரை நீங்கள்
வடக்கில் அடையாளபடுத்த முடியுமா..?

இப்போதும் பகத்சிங்கின் பெயர் தாங்கி கொண்டு
தமிழ் பூமியில்
ஆயிரம் வீரர்கள் வாழ்ந்து கொண்டு தான்
இருக்கிறோம் எங்கே உங்கள் நிலப்பரப்பில் வாழும்
மருதிருவர்கள் பெயர் கொண்ட
ஒரு மனிதனை நீங்கள்
அடையாளப்படுத்துங்களேன்.?

வீரம் நிறைந்த
ஜான்சி ராணிகளின் பெயர் தாங்கிய பெண்கள்
தமிழ் நிலத்தில்
ஆயிரம் உண்டு எங்கே
ராணி வேலுநாச்சியார் பெயர் கொண்ட
ஒற்றை பெண்ணை நீங்கள் வடக்கிலிருந்து எனக்கு
அடையாளப்படுத்துங்களேன் ..?

யாரை யார் நிராகரிப்பது
யாரை யார் தேர்வு செய்வது

உங்களைப்போல் வாய்வழியாக
தேசப்பற்றை நினைவு கொள்பவர்களல்ல நாங்கள்
உயிரில் பெயரில் வாழ்வில்
தேசப்பற்றை வளர்ப்பவர்கள் நாங்கள் ..

கோட்ஸேக்களையும்
சாவர்க்கரையும்
கை தொழும் உங்களுக்கு எப்படி புரியும்

கோட்ஸேக்களையும்
சாவர்க்கரையும் பிள்ளைகளின்
பெயரளவில் கூட சேர்த்து கொள்ளாத
எங்களின் தேசப்பற்றை பற்றி

உங்களுக்கு எப்படி புரியும்..?

கதிர் அவன்



அந்தத் கட்டங்களுக்கு
மௌசு அதிகம்
குதிரை தாவும் கட்டங்கள்
சுவாரஸ்யமானவை.

ராணி வைத்து ஆடும்
கட்டங்கள் ராசாவின்
கம்பீரத்தை நிலைப்படுத்தும்.

விரல்களில் நகரும் குதிரை
தாஜ்மஹாலில் ஒடிய சுல்தான்களின்
குதிரைக்குளம்பை ஞாபகம் செய்யும்.

ராணி தன் கம்பீரத்தால்
சிப்பாய்களை வீழ்த்துவது
வேலுநாச்சியார் உடைவாள்
வரலாற்றைச் சொல்லும்.

குதிரையும் ராணியும்
மன்னராட்சிக்கு மட்டுமல்ல
சதுரங்க ஆட்சிக்கும்
சட்டம் தனை உருவாக்கும்.

குதிரையும் ராணியுமில்லாத
ஆட்டம் தனை
சதுரங்க கட்டம் கூட கருப்பு வெள்ளையில்
நிழற்படத்தை வரலாறாய் பதிவு செய்யும்.

எதிரெதிர் கட்டங்கள்
தாவித் தாவி சிப்பாய்களை வீழ்த்தும்
போரின் வேகத்தை
உலக சாம்பியன் நிர்ணயம் செய்வார்
நிமிடங்களில்.

பல நாள் களப்போராட்டம்
நிமிடங்களில் நிறைவு பெறுகிறது
ராணியும் குதிரையும்
நாடுகளை ஆள்கிறார்கள்.

ஒவியமாய் வாழ்ந்தாலும்
நெஞ்சக்களத்தில்
குதிரைக்குளம்பு சப்தத்தில்
ராணி வருகிறார் கம்பீரமாக
சிப்பாய்களை விரல்களால் வீழ்த்தி!

**வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**

# மெல்லத் தூவிவிடு



ஒவ்வொரும முறையும்
அன்பினாலான ஊடலில்தான்
சாத்தானின் கொம்புகள்
உடைந்து போகின்றன...

அவ்வப்போது நிகழும்
வெறுமைத்தனத்தின் வேர்களைப் பற்றிக்கொண்டு
மீண்டும் மீண்டும் அவைகள்
முளைக்காமல் இல்லை...

சின்னச் சின்ன
உயிர்ப்பூட்டும் அசைவுகளால்
அந்தக் கொம்புகள்
வலுவிழந்து கிடக்கும் வரை
உள்ளங்கள்
ஆரோக்கியமாய்த்தான் இருக்கிறது...

இத்தனையறிந்தும்
அறியா மனமாய்த் தளர்வின்
வாலைப் பிடித்தபடி வாழ்வை
வலம் வருவதைப் பார்த்து
என்ன சொல்வது?

பித்துப் பிடித்தபடி
தலைமயிரைப் பிய்த்துக் கொள்ளத்
தோன்றும் போதெல்லாம் எங்காவது
அன்புதேடி ஓடுவதற்கு,

நளினமாய்,கம்பீரமாய்
நடந்துகொண்டிருக்கும் போதே
அன்பைப் பறவைகளின்
எச்சங்களைப்போல்
தூவிச் சென்றால்தான் என்ன?

களைப்புறும் போதெல்லாம்
இளைப்பாற நிழல்தேடும் அவசியமில்லையே!

உன்னைச் சுற்றி
வனங்களே நிறைந்திருக்க
வானமே உன்னை வியந்து
நன்மழைப் பூச்சொரியும்...

கா.ரஹ்மத்துல்லாஹ்

# சேராத வார்த்தைகள்



சேராத வார்த்தைகளை
நீயும் நானும் இறக்கிக் கொண்டேயிருக்கிறோம்...
எடுத்து வைத்த வார்த்தைகளும்
சேர்மானம் இல்லாமல் திணறிக் கொண்டிருக்க,
இறுதியில் நீ
சில வார்த்தைகளும்
நான் சில வார்த்தைகளும் கை மாற்றிக்
கொள்கிறோம்!
சேராத வார்த்தைகள்
இப்போது
நம்மைக் கையில் வைத்து விளையாடத் தொடங்க....
ஊரெல்லாம்
நம்மைப் பற்றிய வார்த்தைகளே
எங்கும் இறைந்து கிடக்கின்றன!
வா...
அதையாவது ஒழுங்காக அடுக்கி வைப்போம்

முகமது பாட்சா

வறண்ட நிலம்
வளர்ந்து நிற்கிறது
வறுமை!

கோவை.நா.கி.பிரசாத்

எல்லா அழுகையையும்
அடக்க வேண்டிய
அவசியம் இல்லை,
ஆனாலும்
குரல்வளையில் அத்தனை
பிடிவாதமாய் அடைத்து வைத்திருக்கிறேன்.,
ஏந்தாத கரங்களுக்கு முன்
அழுது விடக்கூடாது என்ற
கர்வம் தான்.,
பெரிதாய் வேறொன்றும் இல்லை .

அனு பாரதி

திருத்தப்பட்ட சட்டம்
செய்தி வாசிக்கும் முதிர்கன்னி
பெண்ணின் திருமண வயது 21

குடந்தை அனிதா

# உன் நினைவென்பது



வேக வேகமாக ஓட்டும்
என் இருசக்கர வாகனத்தின்
முகப்பு விளக்கு.......

அம்மாவுக்கு தெரியாமல்
மழையில் நனையும்
சிறு பிள்ளையின் மகிழ்வு.......

ஈன்றெடுத்த கன்றை
நாவால் வருடும்
தாய் பசுவின் வாஞ்சை.......

திடீரென மனதில் உதிக்கும்
ஒரு காதல் பாடலின்
மறந்த வரி........

அனைத்து ஜன்னல்களும்
மூடியிருக்க
தரையிலிருந்து படரும்
தை மாத குளிர்.......

நீண்ட நேர வெக்கைக்கு
பிறகு வரும்
மின்சாரத்தின் இதம்......

வார்த்தைகள் கிடைக்காமல்
முற்றுப்பெறாமலிருக்கும்
கவிதையின் நெடி.....

நிற்காமல் துடிக்கும்
என் இருதயத்தின்
ஐந்தாவது அறை.....

இதமாய் ஒரு தேநீர் வேண்டுமென
நினைத்துக் கொண்டிருக்கையில்
ஆவி பொங்க கிடைக்கும்
கோப்பை தேநீர்.....

அதீத கோபத்தின்
நடுவில்
உதிக்கும் மீச்சிறு நேசம்.....

நடனமாடி முடித்தபின்
தானாய் உதிரும்
தோகை மயிலின் இறகு......

பிரபுசங்கர் க

# நானும் ஒரு பறவையாகிறேன்



வண்ணங்கள் சூழ்ந்த கனவொன்றில்
எனக்கு இறக்கைகள் முளைத்திருந்தது...
பறந்து பார்க்கும் ஆவலில்
எத்தனை முறை எத்தனித்தும்
இயலாமல் போகவே
சோகமாய் நின்றிருந்தேன் நான்...

என் நிலை கண்ட
வண்ணத்துப்பூச்சியொன்று
என் கைகளைப் பிடித்துக்கொண்டே
பறக்கப் பழகித் தந்தது...
அதோடு
மலர் விட்டு மலர் தாவி
மகரந்தச் சேர்க்கை புரிவதையும்
எனக்கு கற்றுத் தந்தது...
பின் வண்ணத்துப்பூச்சி என்னை
ஒரு தூக்கணாங்குருவியிடம்
கொண்டு சேர்த்தது...

தூக்கணாங்குருவி அதன் கூட்டிற்கு
என்னை அழைத்துச் சென்று
அதன் குஞ்சுகளைக் காண்பித்தது...
காய்ந்த இலைகள், குச்சிகள் மற்றும்
நார்களைச் சேகரித்து
கூடு கட்டும் வித்தையையும்
அது கற்றுத்தந்தது...
பின் தூக்கணாங்குருவி என்னை
ஒரு காகத்திடம்
அழைத்துச் சென்றது...

காகம் ஒரு மாமரத்திற்கு
அழைத்துச் சென்று
அதன் நண்பர்களுக்கு என்னை
அறிமுகம் செய்து வைத்தது...
தாகம் தீர்ந்த காகத்தின் கதையையும்,
வடை சுட்ட பாட்டியின் கதையையும்
அதன் பார்வையிலிருந்து விளக்கிய காகம்...
என்னை ஒரு பொன்னாங்கழுகிடம்
அறிமுகப்படுத்தியது...

பொன்னாங்கழுகு
உயரத்தில் பறப்பதற்கான
நுணுக்கங்களைச் சொல்லித் தந்து...
வான்நோக்கி என்னை
அழைத்துச் சென்று
வலசை போதலைப் பற்றி
ஒரு விரிவான வகுப்பெடுத்தது...
அந்நேரமாய் வானில்
வேறு கண்டம் நோக்கி
பறந்து கொண்டிருந்த
ஐபிஸ் பறவைகளிடம்
என்னை ஒப்படைத்து
தன் வசிப்பிடம் நோக்கிப்
பறக்கத் தொடங்கியது
பொன்னாங்கழுகு...

ஐபிஸ் பறவைகள்
அதன் ஃஷி வடிவத்திற்குள்
என்னையும் இணைத்துக் கொள்ள,
கடல் தாண்டி பறக்கலானோம்...
நடுவில் தென்பட்ட கப்பல் ஒன்றில்
சிறிது நேரம் என்னை
ஓய்வெடுத்து வரும்படி அறிவுறுத்தியது
ஐபிஸ் பறவையிலொன்று...

சற்றுநேரம் இளைப்பாறிய நான்
இப்போது தனியாகப் பறந்து கொண்டிருக்கிறேன்...

தங்கராஜ் பழநி



பிரசவித்த தாயின்
வயிறாய்
வரியோடிக்கிடக்கிறது
நதியோடி முடித்த
ஆற்றுப் படுகை...

அமுதா தமிழ்நாடன்

நீண்ட நாட்களாக
ஒரே கடவுச்சொல்லை பயன்படுத்த வைத்து
வாழ்க்கையை சுவாரஸ்யமிழக்கச்செய்து விட்டாய்...

நடுநிசியில் வரும் அலைபேசி அழைப்புகளை
பற்றியாவது கேட்பாய்
என எதிர்பார்த்து ஏமார்ந்து போகிறேன்...

குறுஞ்செய்திகள் பரிமாறி முடித்து
பூட்டாமல் வெளியேறிய நாட்களிலும்
போட்டது போட்டபடி களவு போகாமல் அப்படியே
இருக்கின்றன...

நீ கண்டு கொள்ளாமல்
விட்டதால்கடவுச்சொற்களுக்கான
மரியாதையே போய்விட்டன...

நான் மட்டுமே உலவி ஒவ்வொரு முறையும்
அலைபேசியைதிறந்து மூடும்போது எனக்கு நானே
கேட்டுக்கொள்கிறேன்

எது வெளியேறாமல் இருக்க இந்தப்பூட்டு...
எது உள்ளே வராமல் இருக்க
இந்தப்பூட்டு...

உன் பிறந்தநாள்தான் கடவுச்சொல் என்பதை நீ
தெரிந்து
கொள்ளும்போது உன் மெல்லிய
புன்னகை போதும்...
வேறென்ன

சகி...
ரகசியங்கள் சுவாரசியமாவது
அவை ரகசியங்களாகவே
இருப்பதால் மட்டும் அல்ல.

தோழன் பிரபா

# பிறழ்தல்



அப்பவே சொன்னேன் அவன்
கெண்டை நரம்பை வெட்டனும்
தூங்கும்போது கழுத்த அறுப்பானுக சூதனம்
வெந்நீர் விளாவி வை
புள்ள குளிக்கனும்

கொலசாமிக்கு கெடா வெட்டிட்டானுகளா

ஒரு மனம்பிறழ்ந்தவனின் துண்டு துண்டான
சொற்களை சேகரித்த என்னை அவன்
ஆழமாக பார்த்த பார்வையில்
என்னிடம் உதிர ஆரம்பித்தன
புரையோடிக்கிடந்த
ஆற்றாமையின்
சொற்கள்
அவன் மென் புன்னகையுடன் கடந்து விட்டான்
நான் சொல்ல ஆரம்பித்துவிட்டேன்
நீங்களும் சொல்லியிருக்கலாம்
உங்களிடமே

போஸ் பிரபு

முன்னரே தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்,

நா.மு வைத் தழுவி,

பொறியினின்று நீங்கு
பியாதர் தாஸ்தயேவஸ்கியுடன் பேசு
சேதன் பகத் உடன் பயணி
பீத்தோவனுடன் உறங்கு
கண்ட ஊர் பயணி
காணும் நிறுத்தங்களில் இறங்கு
மனிதர்களிடம் செலவு செய்
நடைபாதைக் கடைகளில் பரிச்சயமாகு
வழிப்போக்கனை கவனி
இல்லா மீசையும் மழி
திரும்ப திரும்ப ஜனனி
லகிரி வஸ்துக்களை விட்டொழி
எழுது கோல் எடு
எதாவது எழுது
யார் என்ன சொல்லி விடப் போகிறார்கள்???
நீயும் எழுத்தாளன் தான்.
மார்தட்டிக் கொள்.....

பா.சரத்

# பெயர்க்காரணம்



பூங்கா சென்றேன்
முத்தப் பூங்கா இது
என்றனர்

மொத்தப் பூங்காவுமா?
என்றேன்

காதலர்கள் தந்துகொண்டது

குழந்தைகளுக்குக் கொடுத்தது

உரையாடல்கள் இடையே உதடு குவிந்தது

அலைபேசிகளில் நனைந்தது

குறுஞ்செய்திகளின் ஸ்மைலிகள்

இப்படி முத்தங்களால் நிறைந்தது இப்பூங்கா
என்றனர்

முரண்பட்டேன்
யதார்த்தமுணர் என்றனர்

கண்டேன் காட்சியொன்று

தரை தழுவி உதடுகளால் மொய்த்துக்கொண்டன
உதிர்ந்த இலைகள் ஒவ்வொன்றும்
மரத்தடி ஒவ்வொன்றிலும்

அர்த்தம் கொண்டது
இப்போது மட்டுமே
பூங்காவின் பெயர்க்காரணம்

ரா.ராஜசேகர்

WRC மற்றும் படைப்பு குழுமம் இணைந்து நடத்தும்

# மகளிருக்கான மாபெரும் சர்வதேச காணொளி பேச்சுப்போட்டி

பரிசு
50,000

இரு பிரிவுகளில்
Below 20
Above 20

தலைப்பு

## மாண்புமிகு மகளிர்

(மகளிர்/பெண் சார்ந்து எந்தக் கருவிலும் பேசலாம்)



நடுவர்: பேச்சாளர் கவிதா ஜவகர்

பதிவு செய்யப்பட்ட காணொளி
வாட்சாப்பில் அனுப்ப :
7338897788

கடைசி நாள்: 05 - 03 - 2022
கால அளவு: மூன்று நிமிடங்கள்

முழு விவரம் அறிய:
padaippu.com

முடிவு அறிவிக்கும் நாள்:
15 - 03 - 2022

padaippu

WRC மற்றும் படைப்பு குழுமம் இணைந்து நடத்தும்

# மகளிருக்கான மாபெரும் சர்வதேச கவிதை போட்டி

தலைப்பு

## மாண்புமிகு மகளிர்

(மகளிர்/பெண் சார்ந்து எந்த கருவிலும் எழுதலாம்)

பரிசு
25,000



பங்குபெறுவோர்:
மகளிர் மட்டும்

நாள்: 22 - 2 - 2022
முழு விவரம் அறிய:
padaippu.com

நடுவர்: கவிஞர் பெருந்தேவி

முடிவு அறிவிக்கும் நாள்:
08 - 03 - 2022
மகளிர் தினத்தன்று

padaippu